# April 9, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தமிழக அரசின் தலைமைச் செயலர் நா.முருகானந்தம் மாற்றப் பட்டு, அவருக்குப் பதிலாக புதிய தலைமைச் செயலராக மூத்த ஐஏஎஸ் அதிகாரி என்.சாய் குமாரை நியமிக்க இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது. இதையடுத்து, அவர் பொறுப்பேற்றுக் கொண்டார்.

(i) இது தொடர்பாக தமிழக அரசின் தலைமைச் செயலருக்கு தேர்தல் ஆணையத்தின் செயலர் லதா திரிபாதி அனுப்பிய கடிதத்தில், தமிழக சட்டப்பேரவை தேர்தல் ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் மறுஆய்வு செய்தது. அதன்படி, மாநில அரசின் தலைமைச் செயலராக 1990-ஆம் ஆண்டு ஐஏஎஸ் அதிகாரி சாய் குமாரை நியமிக்க ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

(ii) தமிழக சட்டப்பேரவைக்கு ஏப்ரல் 23-ஆம் தேதி வாக்குப் பதிவு நடை பெறவுள்ளது. இதில் பதிவாகும் வாக்குகள் மே 4- ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும். இந்நிலையில், தேர்தலை வெளிப்படையாகவும், சுதந்திரமாகவும் நடத்து வதை உறுதிப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை இந்திய தேர்தல் ஆணையம் எடுத்து வருகிறது.

(iii) இதையொட்டி, ஏற்கெனவே மேற்கு வங்கத்தில் தலைமைச் செயலர், காவல் துறை தலைமை இயக்குநர் உள்ளிட்ட உயரதிகாரிகளை மாற்றி தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்தது. இந்த வரிசையில் தற்போது தமிழக அரசின் தலைமைச் செயலரை மாற்றி ஆணையம் நடவடிக்கை எடுத்துள்ளது.

2. வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் குறுகிய கால கடன்களுக்கான வட்டி (ரெப்போ ரேட்) விகிதம் மாற்றமில்லாமல் 5.25 சதவீதமாக தொடரும் என்று இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) அறிவித்தது.

(i) மும்பையில் ஆர்பிஐ ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா தலைமையில் கடந்த 3 நாள்களாக நடைபெற்ற ஆர்பிஐ நிதிக் கொள்கைக் குழுக் கூட்டத்தில் 6 பேர் அடங்கிய குழு ஒருமனதாக இந்த முடிவை எடுத்தது. எனவே, வீட்டுக் கடன், வாகனக் கடன் உள்ளிட்டவற்றில் மாற்றம் இருக்காது.

(ii) இதற்கு முன் பிப்ரவரியில் நடைபெற்ற நிதிக் கொள்கைக் குழுக் கூட்டத்திலும் வட்டி விகிதம் மாற்றப்படவில்லை. அதற்கு முன்பு டிசம்பரில் வட்டி விகிதம் 5.50 சதவீதத்தில் இருந்து 5.25 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

(iii) போரின் தாக்கம்:

நிதிக் கொள்கைக் குழுக் கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் சஞ்சய் மல்ஹோத்ரா கூறியதா வது:

- போரால் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள தாக்கத்தை முழுமையாக ஆய்வு செய்த பிறகு வட்டி விகிதத்தில் மாற்றத்தை மேற்கொள்ளலாம் என முடிவெடுக்கப்பட்டது. பண வீக்கத்தை 2 முதல் 6 சதவீதத்துக்குள் வைக்க வேண்டும் என்பது இலக்காகும். வரும் நிதியாண்டில் பணவீக்கம் 4.6 சதவீதம் என்ற நிலையில் இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. கச்சா எண்ணெய் விலையில் ஏற்பட்ட மாற்றங்கள் அடுத்தகட்டமாக சில விளைவுகளை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.

(iv) வளர்ச்சி குறையும்:

- நடப்பு நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 6.9 சதவீதமாக இருக்கும். கடந்த மார்ச் 31-ஆம் தேதியுடன் நிறைவடைந்த முந்தைய நிதியாண்டின் பொருளாதார வளர்ச்சி 7.6 சதவீதமாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.
- நுகர்வு, முதலீடு ஆகியவற்றால் வளர்ச்சி தொடர்ந்து அதிகரிக்கும் என்றாலும், மேற்காசிய போர் நாட்டின் வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. அதே நேரத்தில் நாட்டின் அடிப்படை பொருளாதாரக் கட்டமைப்பு வலுவாகவே உள்ளது. போரால் பல்வேறு பொருள்களின் விநியோகத்தில் ஏற்பட்ட தாக்கம் எந்த அளவுக்கு உள்ளது என்பதை காத்திருந்துதான் மதிப்பிட வேண்டும் என்றார்.

3. அமெரிக்காவும், ஈரானும் இரு வார காலத்துக்கு போர் நிறுத்தம் செய்வதாக புதன்கிழமை அறிவித்தன. இதையடுத்து, மேற்காசியாவில் சுமார் ஒரு மாதத்துக்கும் மேலாக நிலவிய பதற்றம் தணிந்துள்ளது.

(i) இஸ்ரேல் இந்தப் போர் நிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்து தாக்குதலை நிறுத்துவதாக அறிவித்தது.

(ii) ஈரான் நாடு அணு ஆயுத்தயாரிப்பிலும், நெடுந்தூர ஏவுகணைகள் தயாரிப்பிலும் ரகசியமாக ஈடுபட்டிருப்பதாகவும், இதனால் தங்கள் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும் குற்றஞ்சாட்டி, அந்நாட்டின் மீது கடந்த பிப்ரவரி மாதம் 28-ஆம் தேதிமுதல் இஸ்ரேலும், அமெரிக்காவும் தொடர் தாக்குதல் நடத்தி வந்தன. இந்தத் தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி, ராணுவத் தளபதிகள், படைத் தலைவர்கள் உள்ளிட்டபலர் கொல்லப்பட்டனர்.

(iii) இந்தத் தாக்குதலுக்குப் பதிலடி யாக இஸ்ரேல் மீதும், வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க நிலைகள் மீதும் ஈரானும் தாக்குதல் நடத்தி வந்தது. அத்துடன் உலகில் கச்சா எண்ணெய்க் கப்பல்கள் அதிகம் செல்லும் முக்கியக் கடல்பகுதிகளில் ஒன்றான ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடியது.

(iv) இதனால் உலகம்முழுவதும் கச்சா எண்ணெய் விலை பலமடங்கு அதிகரித்தது. இதையடுத்து, மேற்காசியாவில் போரை முடிவுக்குகொண்டுவர வேண்டுமெனவும், ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் கப்பல் போக்குவரத்துக்குத் திறக்க வேண்டும் எனவும் பல நாடுகள் வலியுறுத்தின.

(v) மத்தியஸ்த பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட பாகிஸ்தான், ஈரான், அமெரிக்கா- இஸ்ரேல் இடையே அமைதி ஒப்பந்தம் கையொப்பமிட ஏற்பாடு செய்து வருகிறது. அமைதித் திட்டம் குறித்து தங்கள் நாட்டின் தலைநகர் இஸ்லாமாபாதில் வெள்ளிக்கிழமை (ஏப்.10) பேச்சுவார்த்தை நடக்கும் எனத் தெரிவித்துள்ள பாகிஸ்தான், இஸ்லாமாபாதுக்கு வெள்ளியன்று ஒப்பந்தத்தை இறுதி செய்ய வரும்படி ஈரான், அமெரிக்கா-இஸ்ரேல் குழுவினருக்கு அழைப்பு விடுத்துள்ளது.

(vi) ஈரானின் முக்கிய நிபந்தனைகள் என்னென்ன?

- அமெரிக்காவின் அச்சுறுத்தல் நிறுத்தப்பட வேண்டும், ஈரானின் அணுசக்தி செறிவூட்டல் திட்டம் ஏற்கப்படுதல், ஈரானுக்கு எதிரான அனைத்து தடைகளும் நீக்கப்படுதல், ஹோர்முஸ் நீரிணை மீது ஈரானுக்கே முழு அதிகாரம், போர்ச் சேதங்களுக்கு ஈடுகட்ட ஹோர்முஸ் நீரிணையில் கட்டண வசூல், மேற்காசிய பிராந்தியத்தில் இருந்து அமெரிக்கப் படைகள் வாபஸ், பிற நாடுகளில் முடக்கப்பட்ட ஈரானின் சொத்துகள் விடுவிப்பு என்பன உள்ளிட்ட 10 நிபந்தனைகள் ஈரான் தரப்பில் விதிக்கப்பட்டுள்ளன.

4. கேரளம், அஸ்ஸாம் மாநிலங்களிலும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் வியாழக்கிழமை (ஏப். 9) ஒரே கட்டமாக பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

5. வியத்நாமின் புதிய அதிபராக, அந் நாட்டின் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலர் டோ லாம் (68) பதவியேற்றுள்ளார்.

(i) புதிய அதிபர் தேர்வுக்காக அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் கலந்துகொண்ட 495 உறுப்பினர்களும் அவருக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதன்மூலம், கட்சியின் தலைமைப் பொறுப்பு மற்றும் நாட்டின் உயரிய அரசுப் பதவி ஆகிய இரண்டையும் வகிக்கும் மிக வலிமையான தலைவராக டோ லாம் உருவெடுத்துள்ளார்.

(ii) வளர்ச்சிக்கு உறுதி:

- அதிபரான பிறகு நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில், வியத்நாமை ஒரு புதிய வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லப்போவதாக டோ லாம் சூளுரைத்தார்.

(iii) புதிய பிரதமர் நியமனம்:

- நிர்வாகரீதியிலான மாற்றங்களின் ஒரு பகுதியாக, வியத்நாம் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் லே மின்ஹங்(55), நாட்டின் புதிய பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

6. 2030-ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் அகமதாபாதில் நடைபெறவுள்ள நிலையில், அதற்கான தொடக்க நிலை ஏற்பாடுகள் தொடர்பாக ஆய்வு செய்ய, காமன்வெல்த் விளையாட்டு அமைப்பின் தலைவர் டொனால்ட் ருகாரே தலைமையில் 5 நபர் குழு 3 நாள் பயணமாக அந்நகரத்துக்கு வந்துள்ளது.

7. முத்ரா கடன் திட்டம் கோடிக்கணக்கானோரின் வாழ்க்கையை மேம்படுத்தியுள்ளது; நாடு முழுவதும் தொழில் முனைவோருக்கு பெரும் ஊக்கமளிப்பதாக அமைந்தது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

(i) சிறிய அளவில் வர்த்தகம், உற்பத்தி மற்றும் சேவைத் துறையில் இருப்போருக்கு அதிகபட்சமாக ரூ.20 லட்சம் வரை கடன் வழங்குவது முத்ரா திட்டமாகும். இதில் சிறிய காய்கறி வியாபாரிகள், இயந்திர பழுதுபார்ப்பு கடை நடத்துவோர், கைவினைத் தொழில் புரிவோர் உள்பட பலதரப்பட்ட சிறிய அளவில் தொழில்களை மேற்கொள்பவர்களுக்கு கடன் வழங்கப்படுகிறது.

(ii) மத்திய பாஜக அரசின் முக்கியத் திட்டங்களில் ஒன்றான முத்ரா திட்டம் தொடங்கப்பட்டு புதன்கிழமையுடன் (ஏப்.8) 11 ஆண்டுகள் நிறைவடைந்தது.

8. 2026 காரீஃப் பருவ காலத்தில் பாஸ்பேட் மற்றும் பொட்டாசியம் (பி அண்ட் கே) உரங்களுக்கு ரூ.41,534 கோடி மானியம் வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

(i) கடந்த 2025 காரீஃப் பருவகாலத்தில் 'பி அண்ட் கே' உரங்களுக்கு மானியமாக ரூ.37,216 கோடி வழங்கப்பட்ட நிலையில், மேற்காசிய போர்ப் பதற்றத்தால் விவசாயிகள் பாதிப்பதைத் தடுக்கும் நோக்கில் மானியத் தொகையை மத்திய அரசு உயர்த்தியுள்ளது.

(ii) பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் புதன் கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பல்வேறு முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. இதுகுறித்து செய்தியாளர்களி டம்

மத்திய தகவல் மற்றும் ஒலிப ரப்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறியதாவது:

- 2026 பருவகாலத்தில் நைட்ரஜன் உரத்துக்கான மானியம் கிலோவுக்கு ரூ.47.32-ஆக நிர்ணயிக்கப்படுகிறது. கடந்த பருவ காலத்தில் இது 43.02-ஆக இருந்தது. பாஸ்பேட் உரத்துக்கான மானியம் கிலோவுக்கு ரூ.52.76-ஆகவும் (முன்பு ரூ.47.96) சல்ஃபர் உரத்துக்கான மானியம் ரூ.3.16-ஆகவும் (முன்பு ரூ.2.87) நிர்ணயிக்கப்படுகிறது.
- ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியத் திட்டத்தின்கீழ் 28 வகையான 'பி அண்ட் கே' உரங்களுக்கு மானியம் அதிகரிக்கப்பட்டுள்ளது.
- இந்த உரங்களுக்கு கடந்த பருவ காலத்தைவிட ரூ.4,317 கோடி மானியம் உயர்த்தப்பட்டு மொத் ரூ.ரூ.41,534 கோடி மானியம் வழங்க மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

(iii) அருணாசல பிரதேசத்துக்கு நீர்மின் திட்டங்கள்:

- அருணாசல பிரதேசத்தில் ரூ.26,069.50 கோடியில் கமலா நீர்மின் திட்டம் (1,720 மெகாவாட்) மற்றும் ரூ.14,105 கோடி மதிப்பில் கலை-2 நீர்மின் திட்டம் என மொத்தம் ரூ.40,150 கோடியில் இரு நீர்மின் திட்டங்களைச் செயல்படுத்த மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.
- ஆண்டுக்கு 6,870 மில்லியன் யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் கமலா நீர்மின் திட்டம் 96 மாதங்களிலும் கலை-2 நீர்மின் திட்டம் 78 மாதங்களிலும் நிறைவு செய்யப்படவுள்ளது.

(iv) ஜெய்பூர் இரண்டாம் கட்ட மெட்ரோ பணிகளுக்கு ஒப்புதல்:

- ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில் ரூ.13,000 கோடி மதிப்பில் இரண்டாம் கட்டமாக மெட்ரோ பணிகளைத் தொடங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- 41 கிலோ மீட்டர் வழித்தடத்தில் 36 ரயில் நிலையங்களைக் கொண்ட இத்திட்டத்தை 50:50 என்ற விகிதத்தில் ராஜஸ்தான் மாநில அரசு மற்றும் மத்திய அரசு இணைந்து மேற்கொள்கிறது என்றார்.

(vi) ரூ.79,459 கோடியில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை :-

- ராஜஸ்தான் மாநிலம், பலோத்ரா மாவட்டத்தில் கட்டமைக்கப் பட்டுவரும் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கான நிதியை ரூ.79,459 கோடியாக உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்ததாக மத்திய அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது
- முன்பு இத்திட்டத்துக்கு ரூ.43,129 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது பன்மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது.
- இதுகுறித்து மத்திய அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: ஆண்டுக்கு 90 லட்சம் டன் பெட்ரோகெமிக்கல் பொருள்களை உற்பத்தி செய்யும் வகையில் பலோத்ரா மாவட்டத்தில் ரூ.79,459 கோடியில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அமைக்கப்படுகிறது. கூடுதலாக ரூ.8,952 கோடி முதலீட்டை ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் (ஹெச்பிசிஎல்) மேற்கொள்ளவுள்ளது. இதன்மூலம் இத்திட்டத்துக்கான ஹெச்பிசிஎல்-இன் முதலீடு ரூ.19,600 கோடியாக அதிகரித்துள்ளது.
- ஹெச்பிசிஎல் ராஜஸ்தான் சுத்திகரிப்பு நிறுவனம் (ஹெச்ஆர்ஆர் எல்) எனப் பெயரிடப்பட்ட இந்த ஆலையயில் ஹெச்பிசிஎல் 74 சதவீத பங்கும், ராஜஸ்தான் அரசு 24 சதவீத பங்கும் கொண்டுள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டது.
- பெட்ரோல், டீசல் மற்றும் பல்வேறு பெட்ரோகெமிக்கல் பொருள்கள் இந்த ஆலையில்

உற்பத்தி செய்யப்படவுள்ளதால் நாட்டின் கச்சா எண்ணெய் தேவைக்கு இறக்குமதியைச் சார்ந்திருக்கும் நிலையில் மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இந்த ஆலையின் தொடக்க விழாவில் பிரதமர் மோடி ஏப்.21-ஆம் தேதி பங்கேற்கிறார்.

9. நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளில் 2029-ஆம் ஆண்டு முதல் 33 சதவீத மகளிர் இடஒதுக்கீட்டை அமல்படுத்தவும், மகளிருக்கு 273 இடங்களை ஒதுக்கும் வகையில் மொத்த மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 816-ஆக உயர்த்தவும் வழிவகுக்கும் வரைவு மசோதாக்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(i) நடப்பு பட்ஜெட் கூட்டத் தொடரின் நீட்சியாக, ஏப்.16 முதல் 3 நாள்களுக்கு நடைபெறும் சிறப்பு அமர்வில் இந்த மசோதாக்கள் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ii) கடந்த 2023-இல் நிறைவேற்றப்பட்ட மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தின்படி (அரசமைப்புச் சட்டத்தின் 106-ஆவது திருத்தம்), புதிய மக்கள்தொகை கணக்கெடுப்புக்குப் பிறகான தொகுதி மறுவரையறைப் பணிகளைத் தொடர்ந்து, இடஒதுக்கீட்டை அமல்படுத்த வழிவகை செய்யப்பட்டிருந்தது. அதன்படி, 2034-ஆம் ஆண்டில்தான் மகளிர் இடஒதுக்கீட்டை அமல்படுத்த முடியும் என்ற நிலை இருந்தது.

(iii) இந்தச் சூழலில், மக்கள்தொகை கணக்கெடுப்பு அடிப்படையிலான தொகுதி மறுவரையறைக்கு முன்பே மகளிர் இடஒதுக்கீட்டை அமல்படுத்தும் வகையில் அரசமைப்புச் சட்டத் திருத்தம் கொண்டுவர மத்திய அரசு முடிவு செய்தது. அதற்கிணங்க மொத்த மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 543-இல் இருந்து 816-ஆக உயர்த்தவும் வழிவகை செய்யப்படும் என தகவல்கள் வெளியாகின.

(iv) வரைவு மசோதாக்களுக்கு ஒப்புதல்:

- இந்நிலையில், தில்லியில் பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் மகளிர் இடஒதுக்கீடு மற்றும் மக்களவைத் தொகுதிகள் அதிகரிப்புக்கான வரைவு மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.
- 2029-ஆம் ஆண்டு முதல் மகளிர் இடஒதுக்கீட்டை அமல்படுத்து வதற்கான அரசமைப்புச் சட்டத் திருத்த வரைவு மசோதா, தொகுதி மறுவரையறை சட்டத்தில் திருத்தம் கொண்டுவர ஒரு வரைவு மசோதா, சட்டப் பேரவையுடன் கூடிய யூனியன் பிரதேசங்களான தில்லி, ஜம்மு-காஷ்மீர் மற்றும் புதுச்சேரியில் மகளிர் இடஒதுக்கீட்டை அமல்படுத்த வகை செய்யும் வரைவு மசோதா ஆகியவற்றுக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியதாகத் தெரிகிறது.
- தொகுதி மறுவரையறைப் பணிகளுக்கு 2027 மக்கள்தொகை கணக்கெடுப்புக்குப் பதிலாக, 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பு தரவுகள் பயன்படுத்தப்படும் எனத் தகவல்கள் கூறுகின்றன.
- நடப்பு நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் கடந்த ஏப்.2- ஆம் தேதியுடன் நிறைவடையவிருந்தது. ஆனால், மகளிர் இடஒதுக்கீடு அமலாக்க மசோதாவை நிறைவேற்றும் நோக்கில் ஏப்.16 முதல் 3 நாள்களுக்கு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த மசோதாவுக்கு அனைத்து கட்சிகளும் திறந்த மனதுடன் ஆதரவளித்து, மகளிரின் நம்பிக்கையை வெல்ல வேண்டும் என்று பிரதமர் மோடி ஏற்கெனவே வேண்டுகோள் விடுத்துள்ளார்.

10. உலகளாவிய போர்கள் குறித்த பகுப்பாய்வு கண்ணோட்டம்; இதில் சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் சிதைவு மற்றும் தற்போது (2026) மேற்கு ஆசியாவில் நடைபெற்று வரும் மோதலின் பேரழிவு விளைவுகள் மீது கவனம் செலுத்தப்படுகிறது.

(i) போரின் வரலாற்று ரீதியான காரணங்களும் வரையறைகளும்

- அடிப்படைத் தூண்டுதல்கள்: வரலாற்று ரீதியாகப் போர்கள் என்பவை எல்லைகள், நீர் உரிமைகள், நில ஆக்கிரமிப்பு, கச்சா எண்ணெய், அரிய கனிமங்கள் மற்றும் அணுசக்தி ஆகியவை தொடர்பான சர்ச்சைகளாலேயே தூண்டப்படுகின்றன.
- அரசியல் காரணிகள்: ஜனநாயகத்தை எதிர்க்கும் சர்வாதிகார ஆட்சிகள், தீவிர தேசியவாதம் மற்றும் இன மோதல்கள் ஆகியவை பெரும்பாலும் மோதல்களுக்கு உந்துசக்தியாக அமைகின்றன.
- வீரத்தின் பண்டையக் கோட்பாடு: வரலாற்றுச் சூழல்களில், "வீரம்" என்பது பெரும்பாலும் பிற பகுதிகளை ஆக்கிரமிப்பது, வளங்களைக் கொள்ளையடிப்பது மற்றும் போரில் தப்பியவர்களை அடிமைப்படுத்துவது ஆகியவற்றைக் கொண்டே வரையறுக்கப்பட்டது; இத்தகைய சூழல்களில் மனிதர்கள் உயிருள்ள உயிரினங்களாகக் கருதப்படாமல், வெறும் "பொருட்களாகவே" பார்க்கப்பட்டனர்.

(ii) முக்கிய வரலாற்று மோதல்களின் காலவரிசை

- பண்டைய காலப் போர்முறை (கி.மு. 146): சிப்பியோ ஏமிலியானஸ் (Scipio Aemilianus) தலைமையிலான ரோமானியப் படைகள் கார்தேஜ் நகரத்தை அழித்தன. பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்; போரில் தப்பிய 50,000-க்கும் மேற்பட்டோர் அடிமைகளாக விற்கப்பட்டனர்.
- முதலாம் உலகப் போர் (1914–1918): 1914-ஆம் ஆண்டு ஜூன் 28 அன்று ஆஸ்திரிய இளவரசர் பிரான்ஸ் பெர்டினாண்ட் படுகொலை செய்யப்பட்டதே இப்போர் மூள்வதற்குத் தூண்டுதலாக அமைந்தது. இம்மோதலின் விளைவாக 1 கோடி வீரர்கள் மற்றும் 7 கோடி பொதுமக்கள் உயிரிழந்தனர்.
- இரண்டாம் உலகப் போர் (1939–1945): 1939-ஆம் ஆண்டு செப்டம்பர் 1 அன்று ஜெர்மனி போலந்து மீது படையெடுத்ததன் மூலம் இப்போர் தொடங்கியது. ஹிரோஷிமா மற்றும் நாகசாகி நகரங்கள் மீது அணுகுண்டுகள் வீசப்பட்டதைத் தொடர்ந்து, 1945-ஆம் ஆண்டு செப்டம்பர் 2 அன்று இப்போர் முடிவுக்கு வந்தது; இப்போர் 8 கோடிக்கும் மேற்பட்ட மக்களின் உயிரைப் பலிகொண்டது.

(iii) ஜெனிவா ஒப்பந்தங்களும் சர்வதேசச் சட்டங்களும்

- உருவாக்கம் (1949): 1945-ஆம் ஆண்டு ஏப்ரல் 21 முதல் ஆகஸ்ட் 12 வரையிலான காலகட்டத்தில், பொதுமக்கள், காயமடைந்தோர் மற்றும் போர்க்கைதிகள் ஆகியோரைப் பாதுகாக்கும் நோக்கில், ஜெனிவா நகரில் நான்கு முக்கிய சர்வதேச ஒப்பந்தங்கள் வரைவு செய்யப்பட்டன.
- 1977-ஆம் ஆண்டுத் திருத்தம்: போர்க்காலங்களில் பொதுமக்கள் மீதும், அவர்களின் உடைமைகள் மீதும் தாக்குதல் நடத்துவதை மிகக் கடுமையாகத் தடை செய்யும் வகையில், கூடுதல் விதிமுறைகள் உருவாக்கப்பட்டன.
- தற்போதைய நிலை: தற்போது இச்சட்டங்கள் பெரும்பாலும் "காகித அளவிலேயே" (எழுத்து வடிவிலேயே) இருந்து வருகின்றன; நவீன கால வல்லரசுகள் இச்சட்டங்களை அப்பட்டமாகப் புறக்கணித்து வருகின்றன.

(iv) நவீன காலப் போர்கள் குறித்த பகுப்பாய்வு (2022–2026)

- உக்ரைன் நெருக்கடி: கடந்த நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வரும் இம்மோதலில், கீவ் மற்றும் மரியுபோல் போன்ற பொதுமக்கள் வசிக்கும் நகரங்கள் மீது ஆளில்லா விமானங்கள் (ட்ரோன்கள்) மற்றும் ஏவுகணைகள் மூலம் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. * காசா இடம்பெயர்வு: போரினால் காசாவின் 90% மக்கள் (சுமார் 20 லட்சம் பேர்) இடம்பெயர்ந்தவர்களாகவோ அல்லது வீடற்றவர்களாகவோ ஆகியுள்ளனர்.
- 2026 மேற்கு ஆசியப் போர்:
- ஈரானின் மினாவில் உள்ள ஒரு பெண்கள் பள்ளி மீது நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் 40 மாணவிகள் உயிரிழந்தனர்; இந்தத் தாக்குதலைச் சிலர் ஒரு "தவறு" என்று புறக்கணித்தனர்.
- ஈரான் மற்றும் லெபனானில் ஏற்பட்ட மொத்த உயிரிழப்புகள் 2,500-ஐத் தாண்டியுள்ளது.
- பஹ்ரைன், குவைத், கத்தார், சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளில் உள்ள அமெரிக்கத் தளங்களைத் தாக்கி ஈரான் பதிலடி கொடுத்துள்ளது.
- நெறிமுறை மீறல்: காபூலில் உள்ள ஒரு மருத்துவமனை மற்றும் ஈரானில் உள்ள பள்ளிகள் மீதான தாக்குதல்கள், நவீனப் போர் ஜெனீவா உடன்படிக்கைகளின் பாதுகாப்புகளைக் கைவிட்டுவிட்டதற்கான சான்றுகளாகும்.

(v) உலகளாவிய பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் தாக்கம்

- எரிசக்தித் தடைகள்: ஹோர்முஸ் மற்றும் பாப்-எல்-மண்டேப் ஜலசந்திகளை மூடுவதாக ஈரான் விடுத்துள்ள அச்சுறுத்தல், உலகளாவிய கச்சா எண்ணெய் வர்த்தகத்தில் 10% முதல் 20% வரை கையாளும் வழித்தடங்களுக்கு ஆபத்தை விளைவிக்கிறது.
- பொருளாதார அதிர்ச்சி: கச்சா எண்ணெய் விலை ஒரு பீப்பாய்க்கு 94 டாலராக உயர்ந்துள்ளது. இது, கோவிட்-19 பெருந்தொற்றின் போது காணப்பட்ட பொருளாதார சீர்குலைவுக்கு ஒப்பான ஒரு நெருக்கடியை உருவாக்கியுள்ளது.
- இந்தியா, சீனா, ஜப்பான், கனடா மற்றும் பிரேசில் போன்ற பெரும் வல்லரசுகள் ஒரு தீர்வைக் காணப் போராடி வரும் நிலையில், ஐ.நா. ஒரு "மௌனப் பார்வையாளராக" விவரிக்கப்படுகிறது.

(vi) போர் என்பது மனிதத் துன்பத்திற்கும் பொருளாதார அழிவிற்கும் மட்டுமே வழிவகுக்கும் ஒரு "அழிவின் விதை" ஆகும். தற்போதைய பாதை சர்வதேச ஒழுங்கு மற்றும் உலகப் பொருளாதாரத்தின் முழுமையான சரிவுக்கு இட்டுச் செல்வதால், போருக்கு ஒரு நிரந்தரமான மற்றும் கண்ணியமான மாற்றீட்டைக் கண்டறியுமாறு உலக சமூகம் வலியுறுத்தப்படுகிறது